


151. தந்தையின் துயரம்

சக்ரவர்த்தியைத் தேடிக் கோசலை கைகேயியின் அரண்மனையை அடைகிறாள். அங்கே அரசர் மூர்ச்சித்துக் கிடப்பதைக் கண்டு, தானும் மூர்ச்சித்து விழுகிறாள். தாயின் துயரத்தையும் வென்று விடுகிறது மனைவியின் துயரம் :

நடந்த கோசலை,
    கேகய நாட்(டு)இறை
மடந்தை கோயிலை
    எய்தினள்: மன்னவன்
கிடந்த பார்மிசை
    விழ்ந்தனள், – கெட்(டு)உயிர்
உடைந்த போதின்
    உடல்விழுந் தென்னவே.

[கேகய நாட்டு இறை மடந்தை — கேகய நாட்டரசனது புதல்வியாகிய கைகேயி. கோயில் — (இங்கே) மாளிகை. எய்தினள் — அடைந்தவளாய். பார்மிசை – தரையின் மீது. கெட்டு - சோர்ந்து. விழுந்து என்ன - விழுந்தாற் போல.]

முனிவர் பணி

பிறகு சிறிது தேறிக் கோசலை பலவாறு புலம்பிக் கதறினாள். அக் கதறலைக் கேட்டுப் பட்டாபிஷேகத்திற்குக் காத்திருந்த மன்னர் முதலியோர் வேண்டிக் கொண்டபடி வசிஷ்ட முனிவர் அங்கே வந்து சக்ரவர்த்தியின் நிலையைப் பார்த்தார்.

இறந்தான் அல்லன் அரசன்,
    இறவா(து) ஒழிவான் அல்லன்!

என்று கண்டு கொண்டார்.

உடனே அந்த நிலைமைக்குக் காரணத்தை வினவ, கைகேயி நிகழ்ந்ததை எல்லாம் விவரமாக நாக்குக் கூசாமல் சொன்னாள். செய்தி அறிந்த

தம் வசிஷ்டர் தமது இன்னுரையாலும் சைத்யோபசாரத்தாலும் மூர்ச்சையாகக் கிடக்கும் சக்ரவர்த்தியைத் தேற்றுகிறார்.

சக்ரவர்த்தி மீது பனி நீர் தெளித்து, விசிறி கொண்டு மென்காற்றுத் தவழும்படி மெல்ல வீசுகிறார் முனிவர். போதம் (அறிவு) தோன்றியதும் தோன்றாததுமாக இருக்கையில், அரசரைக் குளிர்ந்த இனிய சொற்களால் உத்ஸாகப் படுத்துகிறார். விஷம் தலைக்கேறி இறந்து கொண்டிருந்தவன் ஒருவாறு விஷம் தணிய உயிர் காண்பது போல் மூர்ச்சித்திருந்தவர் அந்தச் சைத்யோபசாரத்தால் 'ராமா!' என்று தமது காதற்புதல்வன் பெயரைச் சொல்லிக் கொண்டே மூர்ச்சை தெளிந்து உணர்வு பெறுகிறார்:

சீதப் பனிநீர் அளவித்
　　திண்கால் உதவும் தண்கால்
போதத் தளவே தவழ்வித்(து)
　　இன்சொல் புகலா நின்றான்;
ஓதக் கடல்நஞ்(சு) அனையாள்
　　உரைநஞ்(சு) ஒருவா(று) அவியக்,
காதற் புதல்வன் பெயரே
　　புகல்வான் உயிரும் கண்டான்.

[சீதம் — குளிர்ச்சி. அளவி — தெளித்து. திண்கால் — விசிறி. தண்கால் — குளிர்ந்த காற்று. போதத்து அளவே — அறிவு தோன்றும் வரையிலும். புகலா நின்றான் — சொன்னான். ஓதக்கடல் — கடலிலிருந்து தோன்றிய விஷம். நஞ்சு அனையாள் — நஞ்சை ஒத்த கைகேயி. உரை நஞ்சு — வார்த்தையாகிய நஞ்சு. புகல்வான்



— சொல்லிக் கொண்ட சக்ரவர்த்தி. உயிரும் கண்டான் — தனது உயிரைக் கண்டான்.]

மூர்ச்சை தெளிந்த தசரதர் தம்மைத் தேற்றிய குருவை நோக்கி, "ஐயா! நான் சாகும் காலத்தில், ராமனைக் காட்டை நினையாதபடி செய்து என் வாக்கையும் காப்பாற்ற வேண்டும்" என்று பரிதாபம் முதிர்ந்த குரலில் வேண்டிக் கொள்கிறார். உடனே முனிவர் காரிய சித்தி பெறலாம் என்ற நம்பிக்கையுடன் கைகேயி முகத்தைப் பார்த்து, "இனி நீ உன் மகனுக்கு (ராமனுக்கு) அரசையும், உன் கணவருக்கு உயிரையும் கொடுக்க வேண்டும்" என்று சாதுரியமாக இரந்து வேண்டுகிறார்.

அவளோ விம்மி அழுது கொண்டே பெண் குலத்திற்கு உரிய ஆயுதங்களால் தன் பிடிவாதத்தை அரண் செய்யத் துணிந்து விடுகிறாள். பிறகு முனிவரும் சக்கரவர்த்தியும் நம்பிக்கையை முழுக்க முழுக்க இழந்து விடுகிறார்கள்.

விவாக விலக்கு!

பிரத்தியட்ச யமனைப்போல் தம் முன் நின்று உயிரை வாங்கும் கைகேயி மேல் பெருங் கோபம் கொண்ட சக்கரவர்த்தி, "இவள் என் தாரமல்ல, துறந்தேன்" என்று விவாக விலக்குச் செய்கிறார், வசிஷ்டரையே சாட்சியாக்கி! மேலும், ஒரு குற்றமும் அறியாத இவன் மகனிடத்தும் மனங் கசந்து, "அவனும் என் மகனல்லன்!" என்று துறந்து விடுகிறார்:

"மன்னே ஆவான் வரும்அப்
பரதன் தனையும் மகன்என்(று)
உன்னேன் முனிவா! அவனும்
ஆகான் உரிமைக்(கு)" என்றான்.

[மன் — அரசன். உன்னேன் — நினையேன் — (இங்கே) அந்திமக் கிரியை செய்யும் உரிமை.]



ராமனுக்காகவும் சத்தியத்திற்காகவும் தசரதர் செய்யும் தியாகம், பரதன் செய்யப்போகும் மகத்தான தியாகத்தை எப்படி எடுத்துக் காட்டுகிறது பாருங்கள்!

மனக்கண்முன்

இப்படி யெல்லாம் புலம்பிக் கொண்டிருக்கும் சக்ரவர்த்தி, சீதையையும் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டே ராமன் காட்டுக்குப் போவானென்று நினைக்கிறார். இந்த நினைப்பு, விவாகமானதும் ராமன் தனக்குத் தகுந்த வாழ்க்கைத் துணையான சீதையின் கையைப் பற்றிக்கொண்டே அயோத்தியில் பிரவேசித்த காட்சியையும் அவர் மனக்கண்முன் கொண்டு வருகிறது. என் செய்வார் பாவம்!

"அன்பினால் உருகும் நெஞ்சையும், அன்பிற்காக உயிரையே விட்டுவிடும் உடம்பையும் உடையவன் நான்.

இதனு லல்லவா எனக்கு இவ்வளவு கஷ்டம்? ராமா! அன்பிற்கு அசையாத நெஞ்சையும் உடலையும் இயற்கை உனக்குக் கொடுத்திருப்பது போல் எனக்கும் கொடுத்திருக்கலாகாதா?'' என்று பிரலாபிக்கிறார், ஏதோ ஜன்னிக் கோளாறு ஏற்பட்டு விட்டதுபோல்!

இந்தப் பிரலாபமும், ராமன் சீதை கையைப் பிடித்துக் கொண்டே அயோத்தியில் பிரவேசித்ததுபோல் அயோத்தியை விட்டுக் காட்டிலே பிரவேசிக்கப் போகும் அந்தக் காட்சியையும் பார்க்கிறோம், கேட்கிறோம்:

'நெகுதற்(கு) ஒத்த நெஞ்சும்,
நேயத் தாலே ஆவி
உகுதற்(கு) ஒத்த உடலும்
உடையேன், உன்போல் அல்லேன்!
தகுதற்(கு) ஒத்த சனகன்
தையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணால்
போகக் காணேன்' என்றான்.

[நெகுதற்கு — உருகுதற்கு. நேயம் — நேசம். உகுதற்கு — விழுவதற்கு. தையல் — மகளாகிய சீதை. புகுதக் கண்ட — பிரவேசிப்பதைப் பார்த்த.]

இத்தகைய பாடல்களின் வாயிலாக, கண்கள் இரண்டும் நீராய் ஒழுக, அக் கண்ணீரோடு உயிரும் ஒழுகும்படி பரிதவித்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் கிழச் சக்ரவர்த்தியை அப்படியே நேரில் காண்பது போலக் காண்கிறோம். கண்டு, அருகேயுள்ள குருமூர்த்தியான வசிஷ்ட முனிவரையும் தர்மபத்தினியான கோசலை அம்மாளையும் போல் நாமும் கவலைப் படுகிறோம்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

152. சோகமும் செய்தியும்

கோசல நாட்டின் வளத்தையும், செல்வச் சிறப்பு முதலான பல வேறு சிறப்புக்களையும் நினைத்துப் பார்க்கிறது தசரதர் உள்ளம். "எப்பேர்ப்பட்ட ராஜ்யத்தை என் காதல்மகனுக்குக் கொடுத்தேன்! அவனே கைப்பட்ட ராஜ்யத்தைக் கள்ளக் கைகேசிக்கே வழங்கி விட்டான்!" என்று எண்ணிப் பார்க்கிறார். 'வளம், வண்மை, கள்ளம்' என்ற சொற்கள் இந்த உள்ளத்தைப் பகட்டி, மாறி மாறி மனக் கண்முன் தோன்றுகின்றன, கொட்டை எழுத்துக்களில்! 'கள்ளத்தனம், வள்ளல்-தனம்' — பிராசப் பொருத்தம் தவிர வேறு என்ன பொருத்தம் இருக்க முடியும்? காதலைக் 'கொல்லும் இனிமை' என்கிறார்கள்: தசரதரோ ராமனது வண்மையைக் 'கொல்லும் வண்மை' என்று பிரலாபிக்கிறார்.

கொல்லும் வள்ளல்!

இந்தப் பிரலாபம் கிழச் சக்ரவர்த்தியின் ஏக்கத்துடனும் பெருமூச்சுடனும் நம் காதில் வந்து விழுகிறது:

'அள்ளற் பள்ளப் புனல்சூழ்
அகல்மா நிலமும், அரசும்,
கொள்ளக் குறையா நிதியின்
குவையும் முதலாம் எவையும்,
கள்ளக் கைகே சிக்கே
உதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளல் தனம்,என் உயிரை
மாய்க்கும், மாய்க்கும்!' என்றான்.

[அள்ளல் — சேறு. பள்ளப் புனல் — பள்ளத்திலே பாயும் தண்ணீர். அகல் மாநிலம் — அகன்ற பெரிய ராஜ்யம். நிதியின் குவை — செல்வக் குவியல். முதலாம் — இவை முதலிய. எவையும் — எல்லாவற்றையும். மாய்க்கும் — கொல்லும்.]

"கள்ளக் கைகேசிக்கு நீர்வளமும் நிலவளமும் பொருந்திய பெரிய ராஜ்யத்தை வழங்கிப் புகழ்கொண்ட ராமனது வண்மை என் உயிரைக் கொல்லும், கொன்றுவிடும்; என்னைப் பிழைத்திருக்க விடாது!" என்



றெல்லாம் புலம்பும் சக்ரவர்த்தி புத்திர சோகத்தின் உச்ச நிலையை அடைந்து விட்டார்.

வருமோ, வருமோ ?

இப்படிப் பலவிதமாய்ப் புலம்பிப் பரிதவிக்கும் சக்ரவர்த்தியை நெருங்கி வசிஷ்டர், "ராமனைக் காட்டுக்குப் போகாதபடி நான் இப்பொழுதே தடுத்து விடுகிறேன்" என்று மறுபடியும் தேற்றுகிறார். தமது உபதேசத்தால் கைகேயியைத் திருத்த முடியவில்லை என்று கண்டுகொண்டவர், தமது பிரிய சிஷ்ய ரத்தினமான ராமனைத் திருப்பி விடக்கூடும் என்று நம்புகிறார்.

குருவின் வார்த்தையைக் கேட்டதும் தசரதர் முதலில் சிறிது தேறினவர் போலக் காணப்படுகிறார்; ஆனால், அடுத்த நிமிஷத்திலே பலவீனத்தால் உணர்வும் உயிரும் சோர்ந்து மறுபடியும் மூர்ச்சிக்கிறார். உடனே கோசலை, "முனிவருடன் நம் மகன் வந்தாலும் வருவான். அரசே! வருந்தாதேயும்" என்று தேற்றிய வண்ணம் அவர் பாதங்களையும் முகத்தையும் உடலையும் பல முறைத் தடவிக் கொடுக்கிறாள். அப்பொழுது அரசர் ஒன்றுந் தெரியாத மயக்கத்தில் இருந்து கொண்டே மெள்ள மெள்ள "நம் மகன் வருமோ, வருமோ?" என்று புலம்புகிறார்:

சாபமா ? அனுக்கிரகமா ?

பிறகு சக்ரவர்த்தி திடீரென்று தெளிந்து முன்னே தமக்கு நேர்ந்த சாபம் ஒன்றின் வரலாற்றை வெளியிடத் தொடங்குகிறார்.

"வேட்டையாட விரும்பி ஒரு சமயம் நான் வில்லுங் கையு மாய்க் கானகம் சென்று, பல மிருகங்களும் தண்ணீர் பருகுவதற்கு வரும் ஒரு நதியின் கரையில் மறைந்திருந்தேன். அப்போது ஒரு முனிகுமாரன் அக் காட்டில் தவஞ் செய்து கொண்டிருந்த குருடர்களாகிய தன் தாய் தந்தையர்களுக்குத் தண்ணீர் கொண்டு போக வேண்டுமென்று அந் நதிக்கு வந்து நீரை மொண்டு கொண்டான். அந்த ஒலியை யானை நீர் பருகும் ஒலி யென்று கருதி, அந்த இடத்தை இலக்காக வைத்து ஓர் அம்பு எய்து விட்டேன்.

"உடனே மனிதக் குரலில் ஓர் அலறல் என்னைத் திடுக்கிடச் செய்தது. முனிகுமாரன் கீழே விழுந்து உருண்டு புரண்டு அலறிக் கொண்டிருந்தான். நான் ஓடிப் போய், 'ஐயா! நீ யார்?' என்று கேட்டேன். அவன் நடந்ததைச் சொல்லி, 'இது ஊழ்வினைப் பயன்; நீ துயரப் படுவதில் பயனில்லை. யானை என்று எண்ணித்தானே அம்பு போட்டாய்? என் பெற்றோருக்குத் தண்ணீர் கொண்டு போய்க் கொடுத்து, என் மரணத்தைத் தெரிவித்து, நான் சாகும்போது அவர்களைத் தொழுததாகவும் சொல்லு' என்று கூறி மரணம் அடைந்தான்.

"நானும் அப்படியே தண்ணீர் கொண்டு போக அவர்கள் என்னைத் தங்கள் புதல்வனாகவே எண்ணிக் கொண்டு, 'ஏன் இவ்வளவு தாமசம்? உனக்கு என்ன ஆபத்தோ என்று வருந்திக் கொண்டிருந்தோம். எங்களைத் தழுவிக் கொள்ள' வா என்று சொன்னார்கள். உடனே நான் நடந்ததைச் சொல்லி அவர்கள் காலில் விழுந்து பொறுத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டேன்.

"அவர்கள் இருவரும் கீழே விழுந்து புரண்டு துயரக் கடலில் ஆழ்ந்து, 'இன்றே நாங்கள் கண்ணிழந்தோம்!' என்று புலம்பினார்கள். நான் அவர்களைச் சமாதானப் படுத்த முயன்று, 'இன்று முதல் நான் உங்



களுக்குப் புதல்வனாக இருந்து நீங்கள் இட்ட பணியைச் செய்வேன்" என்று தேற்ற முயன்றேன்.

"முனிவரோ ஆறாத வயிற்றெரிச்சலுடன், 'நீயும் எங்களைப்போல் மகனைப் பிரிந்து மரணம் அடைவாய்!' என்று சாபம் கொடுத்தார். பிறகு அவர்கள் இருவரும் புத்திர சோகத்தால் உயிரை விட்டார்கள். அச்சாபம் எனக்கு அச்சமயம் துன்பந் தரவில்லை, இன்பமாகவே இருந்தது. எனக்குப் புதல்வன் உண்டென்று அவர் அருள் செய்ததாகவே மகிழ்ந்து போனேன். ஆனால் இப்போதோ..........." என்று ஏங்கிப் பெரு மூச்சு விடுகிறார் சக்ரவர்த்தி.

வசிஷ்டர் செய்தி

ஆகையால் ராமன் காட்டுக்குப் போவதும் தனக்கு உயிர் போவதும் நிச்சயம் என்று கோசலையிடம் சொல்லித் தசரதர் இடர்ப்படவும், கோசலை மதி மயங்கி மூர்ச்சித்துப் போகிறாள். இந்த விபரீதங்களைக் கண்ணாரக் கண்ட வசிஷ்டர் துக்கம் தேங்கிய நெஞ்சுடன் ராமனை நோக்கி விரைந்து போகிறார்.

வழியில், அரசர் முதலானவர்கள் சபையாக இருந்த முடிசூட்டு மண்டபத்திற்கு வந்து அவர்களுக்குச் செய்தி தெரிவிக்கிறார்:

'கொண்டாள் வரம்இரண்டு
கேகயர்கோன் கொம்(பு); அவட்குத்
தண்டாத செங்கோல்
தயாதனும் தான்அளித்தான்;
ஒண்தார் முகிலை, வனம்
போகென்(று) ஒருப்படுத்
எண்தானும் வேறில்லை [தாள்;
ஈதடுத்த ஆ(று)' என்றான்.

[கேகயர் கோன் கொம்பு — கேகய மகாராஜாவின் மகளான கைகேயி. அவட்கு — அவளுக்கு. தண்டாத செங்கோல் — நீதி தடைப்படாத அரசு. ஒண்தார் முகிலை — மாலை சூடிய நீலமேகம் போன்ற ராமனை. போகென்று — போக என்று. ஒருப்படுத்தாள் — சம்மதிக்கச் செய்தாள். எண் — எண்ண வேண்டியது. ஈது — இது. அடுத்த ஆறு — பொருந்தின விதம்.]

இது கேட்ட பிறகு தான் கைகேசி அரண்மனையிலிருந்த அழுகைக் குரலின் பொருள் அச்சபையினருக்கு ஒருவாறு விளங்கலாயிற்று.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

153. செய்தி பரவுகிறது

'வசிஷ்டர் ராமன் தலைமேல் கிரீடத்தை எப்போது தூக்கி வைக்கப் போகிறாரோ?' என்று எதிர்பார்த்த வண்ணம், அரசர் முனிவர் முதலியோர் பட்டாபிஷேக மண்டபத்தில் காத்திருந்தார்கள். மண்டபத்திலும் வெளியிலும் பொது ஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்ததோடு, தங்களுக்கெல்லாம் ஒருயிராயிருக்கும் ராமன் முடிசூடி வரும் கோலத்தைக் கண் குளிரப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுடன், உப்பரிகைகளிலும் சாளரங்களிலும் முற்றங்களிலும் சுற்றுச் சுவர்களிலும் வாசல்களிலும் முன் வாசற் சோலைகளிலும் சாலைகளிலும் சந்திகளிலும் ராஜ வீதிகளிலும் மதில்களிலும் மொய்த்துக் கொண்டிருந்தார்கள். அயோத்திமா நகரம் எவ்வளவு ஆத்திரத்தோடும், எத்தகைய அக மகிழ்ச்சியோடும் ராம பட்டாபிஷேகத்தை எதிர் நோக்கியிருந்தது!


கூக்குரலின் காரணம்

முகூர்த்தத்தை அறிவிக்கும் மங்கல வாத்தியங்களின் கோஷத்தைக் கடைந்துகொண்டு, திடீரென்று ஒரு கூக்குரல் — கதறிக் கொண்டிருந்த அழுகைக் குரல் — பட்டாபிஷேக மண்டபத்தில் இருந்தவர்களின் காதிலே விழுந்தது. என்ன விபரீதம்! அந்த அழுகைக் குரல், பக்கத்தில் இருந்த கைகேயி மாளிகையிலிருந்து தான் வந்தது. என்ன? கோசலையின் குரல் அல்லவா? 'மங்களகரமான இச் சமயத்தில் ராமன் தாயார் கைகேயி மாளிகையில் கூக்குரலிட்டு அழுவதற்குக் காரணமான செய்தி என்னவோ?' என்று அரசர்களும் பிறரும் சந்தேகித்தார்கள்.

வசிஷ்ட முனிவர் போய்த் தசரதனது பெருந் துன்பம் கண்டு, நிகழ்ந்ததை யெல்லாம் அறிந்த பின், முடி சூட்டு மண்டபத்துக்குத் திரும்பி வந்து செய்தி தெரிவித்தார். 'கொண்டாள் வரமிரண்டு' என்று கைகேயி தசரதனிடமிருந்து பெற்ற வரங்களைக் குறிப்பிட்ட பின் மேலும் சொல்லுகிறார்:

வேந்தன் பணியினால்
கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தள் மிசைக்கிடந்த
பார்அளிப்பான் ஆயினான்;
ஏந்து தடந்தோள்
இராமன், திருமடந்தை
காந்தன், ஒருமுறையே
காடுறைவான் ஆயினான்.

[வேந்தன் – தசரதன். பணி – கட்டளை. மெய்ப் புதல்வன் – ஸத் புத்திரனான பரதன். பாந்தள்மிசைக் கிடந்தபார் – ஆதிசேஷன் தாங்கிக் கிடக்கும் இந்தப் பெரிய ராஜ்யம். அளிப்பான் ஆயினான் – பாதுகாக்கும் சக்ரவர்த்தி யாகிறான். ஏந்து தடந்தோள் – உயர்ந்து பருத்த வீரத் தோள். திருமடந்தை – லட்சுமி; சீதா லட்சுமி. காந்தன் – கணவன். ஒரு முறையே – உறுதியாக. காடுறைவான் ஆயினான் – காட்டில் வசிப்பவன் ஆகிறான்.]



'தசரதன் கட்டளையென்பதாக ஏதோ ஒன்று எப்படியோ பிறந்து விட்டது, கைகேயிக்கு வரம் கொடுப்பதை முன்னிட்டு' என்று சொன்ன வசிஷ்டர் அந்த இரட்டை வரத்தின்படி பரதன் ராஜ்ய மாளப்

போகிறான் என்றும், பிறவிச் செல்வனும் சீதாலட்சுமியின் கணவனுமான வீர ராமன் காட்டில் வசிப்பான் என்றும் தெரிவித்தார். 'ராமன் காட்டுக்குப் போவான்' என்று வசிஷ்டர் சொன்னதும், கேட்டவர்கள் எல்லாரும் — ஆண்களும் பெண்களும், அரசர்களும் அந்தணர்களும் தசரதரைப்போல் உயிர் துடிக்கக் கண்ணீர் வடித்துப் பெரு மூச்சு விட்டுக் கீழே விழுந்து புரளுகிறார்கள்.

'அறத்தைக் கைவிடுவோம்!'

நகரமெங்கும் செய்தி விரைவாகப் பரவி விடுகிறது. பளிச்சென்று செய்தி கேட்டவர்கள் இன்னதென்று தெரியாது திகைத்து நிற்கிறார்கள். சிறிது நேரத்துக்குள் எல்லாப் பக்கங்களிலும் வாய்விட்டு அழும் ஓசை அதிகமாய்க் கேட்கிறது. அரசர்கள் பெருங் காற்றினால் தள்ளப்பட்ட விருட்சத்தைப்போல் கீழே விழுந்து ஏங்குகிறார்கள்.

"சக்ரவர்த்தி கொஞ்சமும் தயை தாட்சண்யமில்லாமல் தர்மத்தைக் கைவிட்டு விட்டாரே! இனி நமக்குத்தான் என்ன தர்மம் வேண்டியிருக்கிறது?" என்கிறார்கள் :

'ஆஆ! அரசன்
    அருளிலனே ஆம்!' என்பார்
'காவா அறத்தை இனிக்
    கைவிடுவேம் யாம்!' என்பார்.

[அருள் இலனே – அருள் இல்லாதவனே. காவா – காவாதபடி. கைவிடுவேம் – கைவிடுவோம். யாம் – நாம்.]

தாய்மார்களின் ஏக்கம்

ஆண் மக்களைக் காட்டிலும் உணர்ச்சி வசமாகி இரங்கும் சுபாவமுள்ளவர்கள் பெண்கள். இவர்கள் துக்கத்தை என்னென்பது?

மாதர் அருங்கலமும்
    மங்கலமும் சிந்தித்,தம்
கோதை புடைபெயரக்,
    கூற்றனைய கண்சிவப்பப்,
பாதமலர் பதைப்பத்
    தாம்பதைத்துப் பார்சேர்ந்தார்,
ஊதை எறிய
    ஒசிபூங் கொடியொப்பார்.

[அருங்கலம் — அரிய ஆபரண ங்கள். மங்கலம் — மங்கல நாண். கோதை — கூந்தல். புடை பெயர — அவிழ. கூற்று அனைய — எமனை ஒத்த. பதைப்ப — பதைக்க. பார் — பூமி. பார் சேர்ந்தார் — பூமியில் விழுந்தார்கள். ஊதை — பெருங் காற்று. ஒசி — துவளும் ; அசைகிற.]

இவர்கள் உள்ளங் கசந்து, 'இனி நமக்கு என்ன அழகு வேண்டி யிருக்கிறது?' என்று தங்கள் ஆபரணங்களை வீசி யெறிந்து விடுகிறார்கள்.

'இனி நமக்கு வாழ்வு தான் என்ன இருக்கிறது?' என்று நினைக்கும்போது அந்த நினைப்பின் வசமாகி, தங்கள் தாலிச் சரடாகிய மங்கல நாணையும்கூட அறுத்து எறிந்து விடுகிறார்களாம். கூந்தலோ அலங்கோலமாக அப்படியும் இப்படியும் புரண்டு பிரிந்து தொங்குகிறது. கூற்றை ஒத்த கொலைக் கண்கள் இப்போது அந்த உல்லாசக் கொடும் பார்வை யெல்லாம் இழந்து அழுது அழுது கோவைப் பழமாய்ச்சிவந்து போய்விட்டன.

துக்கம் மேலும் மேலும் அதிகப்பட, அதைத் தாங்க முடியாமல் கால் பதைக்க உடல் பதைக்கப் பூமியில் அப்படியே சாய்ந்து விடுகிறார்கள்.

ராமன் தாயைப் போல் பட்டாபிஷேகத்தை எதிர் பார்த்திருந்த தாய்மார்களின் நிலை இது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

154. கண் செய்த பாவம் தானு?

அயோத்தியிலுள்ள தாய்மார், ராமன் தாயைப் போலவே பட்டாபிஷேகத்தை எதிர்பார்த்திருந்தார்கள் :

மாதர்கள் கற்பின் மிக்கார்,
கோசலை மனத்தை ஒத்தார்.

அவர்களுக்குத் தங்கள் பிள்ளை முடிசூடுவதாகவே எண்ணம். இத்தகைய மனநிலை வாய்ந்த மாதர்கள், 'ராமன் முடி சூடவில்லை, காட்டுக்குப் போவான்' என்று கேள்விப் பட்டதும், தலைவிரி கோலமாய்க் கண் சிவக்க அழுது, ஆபரணங்களையும் மங்கல நாணையும்கூட வீசியெறிந்து, பதைபதைத்துக் கீழே விழுந்தார்கள் என்பதைப் பார்த்தோம்.

இனி, இளம் பெண்கள் சீதைபோலப் பட்டாபிஷேகத்தை அவ்வளவு ஆசையுடன் எதிர் பார்த்திருந்தார்களாம் : "வேறுள மகளிர் எல்லாம்—சீதையை ஒத்தார்!" இவர்களுக் கெல்லாம் தங்கள் புருஷர்களுக்கு ராஜ்யம் கிடைப்பதாகவே எண்ணம்.

ஐயோ! பிரிவோமோ?

இப்பொழுது இவர்களது இள நெஞ்சு என்ன பாடு படுகிறது, பாருங்கள் :

உந்தாது, நெய்வார்த்(து)
உதவாது, கால்எறிய
நந்தா விளக்கின்
நடுங்குகின்ற நங்கைமார், —
'செந்தா மரைத்தடங்கண்
செவ்வி அருள்நோக்கம்
அந்தோ! பிரிதுமோ?
ஆ! விதியே! ஓ!' என்பார்.

[உந்தாது — தூண்டாமல். கால் — காற்று. எறிய — வீச. நந்தா விளக்கு — அவியாத விளக்கு. தடங்கண் — பெரிய கண்கள். செவ்வி — அழகு; (இங்கே) புதிய புதிய அழகுகள். பிரிதுமோ — பிரிந்து விடுவோமோ.]

அப்பொழுது மலர்ந்த செந்தாமரைபோல் ஒளி தோற்றி மலரும் அந்தக் கண்களின் சௌந்தரியத்தை இப் பெண்களால் எப்படி மறக்க முடியும்? 'ராமன் அந்த அழகான கண்களுடன் பார்க்கும்போது, எவ்வளவு மகிழ்ச்சியுடன், எவ்வளவு ஆழ்ந்த அருளுடன் நோக்குவான்!' என்று நினைக்கிறார்கள். மகிழ்ச்சியால் விரிந்த அக் கண்களிலே தான் எத்தனை புதிய புதிய அழகுகள்! 'ஆழங் காண முடியாத கருணை - ஊற்றுக்கள்' என்று சொல்லும்படியிருக்கும் கண்கள். "அந்த மகிழ்ச்சி நிரம்பிய, அழகு மிதக்கும், அருள் நோக்கத்தை — அந்தோ! — நாங்கள் பிரிந்து விடுவோமோ?" என்று புலம்புகிறார்கள். "பிரிந்து எப்படி உயிர் வாழப் போகிறோமோ?" என்று கலங்குகிறார்கள்

'ஆ, விதியே! ஓ!' என்று அந்த இளம் பெண்கள் நெடு மூச்சு விட்டு ஏங்கி நிற்கும் காட்சி அப்படியே நம் கண் முன் வருகிறது, இக்கவிதைக் கண்ணாடி வாயிலாக.

இந்த இளம் பெண்களின் பேரழகும், இக்கட்டழகிகள் நடுங்குகின்ற நடுக்கமும் தான் எவ்வளவு பிரத்தியட்சமாகி விடுகின்றன —

உந்தாது, நெய்வார்த்(து)
உதவாது, கால்எறிய
நந்தா விளக்கின்
நடுங்குகின்ற நங்கைமார்

என்ற அடிகளிலே!

'மண் செய்த பாவம்'


நகரவாசிகள் பல இடங்களில் கூடி நின்று எப்படி யெல்லாம் வருந்துகிறார்கள்! எப்படி யெல்லாம் பேசிக் கொள்கிறார்கள்! இப்பொழுது இரண்டு கூட்டங்களைப் பார்க்கிறோம். ஒரு கூட்டத்தில் என்ன பேச்சு நடைபெறுகிறது என்பதைக் கவனிப்போம். இக் கூட்டத்தினரில் சிலர் விவசாயிகள், சிலர் வியாபாரிகள். இவர்களில் விவசாயிகள் ராமனுடைய ஆட்சியில் விவசாயத்திற்கு விசேஷ நன்மைகள் ஏற்படுமென்று நம்புகிறார்கள். ஆகவே, ராமன் ஆளும் பாக்கியத்தைப் பெறுமையால்,

மண்செய்த
பாவம்
உளது!
......

என்று கதறுகிறார்கள். "மண்ணை இனி யார் உழப் போகி



ரூர்கள்? அராஜகம் ஏற்பட்டுப் பயிர்த் தொழில் [பாழாகி விடுமே! இதற்குக் காரணம், பூமிதேவி செய்த பாவம்தான்!'' என்பது இவர்கள் நினைப்பு.



'பெண் செய்த பாவம்'

அதே கூட்டத்திலுள்ள வியாபாரிகள், விவசாயத்தைக் காட்டிலும் வியாபாரத்திற்கு நல்லரசு இன்றி யமையாதது என்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவர்கள், "பூமிதேவி செய்த பாவத்தை விடப் பெரிது லட்சுமி தேவி செய்த பாவம்!'' என்று அலறுகிறார்கள்:

.... 'மாமலர்மேல்
பெண்செய்த பாவம்
அதனில் பெரிதெ'ன்பார்.

[மாமலர்மேல் பெண் — மகா லட்சுமி; வியாபாரம் முதலியவற்றால் கிடைக்கும் பொன்னுக்கும் ரத்தினங்களுக்கும் அதிதேவதை. அதனில் — அதைக் காட்டிலும்.]

'கண் செய்த பாவம்'

அப்போது இக் கூட்டத்திலிருந்த வேறு சிலர், "பூமிதேவியைக் காட்டிலும், மகா லட்சுமியைக் காட்டிலும் எவ்வளவோ பாவத்தைச் செய்திருக்கின்றன பார்ப்பவர் கண்கள்!'' என்று ஏங்குகிறார்கள்:

.... 'பூதலத்தோர்
கண்செய்த பாவம்
கடலில் பெரிதெ'ன்பார்.

S. Kuppuswamy Iyengar

[பூதலத்தோர் — இவ்வுலகத்திலுள்ள நாம். கடலில் — கடலைக் காட்டிலும்.]

‘ புண் செய்த...விதி ’

இவ்விதமாக இவர்கள் கூறி முடிப்பதற்கு முன், சிறிது தூரத்திலுள்ள அடுத்த கூட்டத்திலிருந்து,

‘ புண்செய்த, நெஞ்சை
விதி!’ என்பார்

[புண்செய்த — புண்ணாகச் செய்து விட்டது.]

என்று யாரோ ஏங்கிக் கதறுவதும், மேலே சொன்ன பேச்சுக்களோடு வந்து கலந்து விடுகிறது. “ நம்முடைய நெஞ்சை—ஐயோ! – விதி எப்படிக் குத்திப் புண்ணாகச் செய்து விட்டது!” என்ற கதறல் சிறிது முன்னும், “ கண் செய்த பாவம் கடலில் பெரிதென்பார் ” என்ற ஏக்கம் சிறிது பின்னுமாகக் காதில் வந்து விழுகின்றன.

இவற்றை யெல்லாம் ஒரே சொற் சித்திரமாக நம் கண்முன் கொண்டு வரும் பாட்டு :

‘ மண்செய்த பாவம்
உள(து)!’ என்பார் ;
‘ மாமலர்மேல்
பெண்செய்த பாவம்
அதனில் பெரி(து)!’
என்பார் ;
‘ புண்செய்த, நெஞ்சை
விதி!’ என்பார் ;
‘ பூதலத்தோர்
கண்செய்த பாவம்
கடலில் பெரி(து)’
என்பார்.

‘ மண் செய்த பாவம் ’ என்றும், ‘ (மாமலர்மேல்) பெண் செய்த பாவம் ’ என்றும், ‘ கண் செய்த பாவம் ’ என்றும் கதறல், அலறல், புலம்பல்களுக்கிடையே, ‘ புண் செய்த(து) நெஞ்சை விதி!’ என்ற ஹிருதய தாபம் எப்படிக் கொதித்துப் பொங்கி விழுந்திருக்கிறது, பாருங்கள் !

155. ராம ராஜ்யத்திலும், 'மனித இயற்கை'தான்

"ராமன் தான் காட்டுக்குப் போகிறான்; பரதன் தான் ஆளப் போகிறானா? அராஜகம் ஏற்பட்டு எல்லாம் பாழாய்ப் போக வேண்டியது தான்!'' என்று சிலர் பேசிக் கொள்கிறார்கள் :

'ஆளான் பரதன்
அர(சு)' என்பார், 'ஐயன் இனி
மீளான்; நமக்கு
விதிகொடிது காண்!' என்பார்

[ஐயன் – ராமன். மீளான் – திரும்பி வரமாட்டான்.]

இவர்கள் குணக்கடலும் வைராக்கிய புருஷனுமான பரதனை நன்கு அறிந்தவர்கள், 'ஆளான் பரதன் அரசு!' என்று, முன் கூட்டியே பரதன் கிரீடத்தை மறுத்து விடுவான் என்பதைக் குறி சொல்வது போலச் சொல்லி விடுகிறார்கள்.

பரதனைப் பழித்தல்

எனினும், நகர மாந்தர்களில் பரதனை இகழ்ந்து பேசுகிறவர்களும் உண்டு. இவர்கள், பரதனை "வஞ்சித்த பேதை சிறுவன்'' — அதாவது வஞ்சித்த கைகேயி பிள்ளை — என்று குறிப்பிடுகிறார்கள். கைகேயிக்குத் தான் என்ன பட்டம் கொடுக்கிறார்கள்!

'வஞ்சித்த பேதை' என்கிறார்கள். "வஞ்சனைக்காரி மகன், தந்தை ராமனுக்குக் கொடுத்த நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்வதிலும் அதிசய மில்லை; ஆனால் ராஜ்ய லட்சுமி பரதனை அங்கீகரிப்பாளா?'' என்பது இவர்களைக் கலக்கும் பிரச்னை.

சக்ரவர்த்தியைப் பழித்தல்

"அந்த வஞ்சனைக்காரி மீது தான் கிழச் சக்ரவர்த்திக்கு என்ன மோகம்! அதனால் தான் மதி மயங்கி ராஜ்யத்தை அவளுக்கும் அவள் மகனுக்கும் கொடுத்திருக்கவேண்டும்'' என்று சக்ரவர்த்தியைப் பழிக்கிறார்கள் சில நகரவாசிகள் :

‘ஆதி அரசன்
அருங்கே கயன்மகள்மேல்
காதல் முதிரக்
கருத்தழிந்தா னும்’ என்பார்.

[ஆதி அரசன் – முதலாவனான சக்ரவர்த்தி; வயது மூதிர்ந்த சக்ரவர்த்தி. அருங் கேகயன் மகள் – அருமையான கைகேயி.]

“நம் கிழட்டுச் சக்ரவர்த்திக்கு மீசை நரைத்தும் ஆசை நரைக்கவில்லையே! வயது முதிரக் காமமும் முதிர்ந்து அறிவைக் கொன்று விட்டதே!” என்று பரிகாசமாய்ப் பேசுகிறார்கள்.

என்ன அவஸ்தை!

வேறு சிலர் தாங்களும் ராமனோடு வனவாஸம் செய்வதாக உத்தேசிக்கிறார்கள்:

‘சீதை மணவாளன்
தன்னோடும் தீக்கானம்
போதும்; அதுஅன்றேல்
புகுதும் எரி!’ என்பார்.

[தீக்கானம் – தீயைப்போல் காயும் கொடிய வனம். போதும் – நாம் போவோம். எரி புகுதும் – அக்கினிப் பிரவேசம் செய்வோம்.]

சீதையும் மணவாளனுடன் காட்டுக்குப் போவாளென்றே இவர்கள் தீர்மானிக்கிறார்கள். சீதையையும் ராமனையும் இவர்கள் பிரித்துப் பேசுவதில்லை; சீதாராமன் (சீதை மணவாளன்) என்றே ராமனைக் குறிப்பிடுகிறார்கள். “தீக்கானம் போவோம்; அன்றேல் தீயிலேயே புகுவோம்!” என்பது இவர்கள் கருத்து.

உண்மையில், அயோத்தியாபுரி வாசிகள் தீப் புகுந்தவர்களைப் போலவே அவஸ்தைப்படுகிறார்கள்.

நெய்யார் அழல்உற்ற(து)
உற்றார்அந் நீள்நகரார்!

[நெய்ஆர் அழல் – நெய் பெய்த நெருப்பு. அழல் உற்றது உற்றார் – நெருப்பில் விழுந்து விட்டது போலவே துன்புற்றார். நீள் நகரார் – பெரிய நகரத்தில் உள்ளவர்கள்.]

அரசர்களைப் பழித்தல்

‘சக்ரவர்த்தி அருளே இல்லாதவர்!’ என்று சிற்றரசர்கள் அவரைப் பழிக்கக் கேட்டோம். பொது மக்களிற் சிலரோ, “சக்ரவர்த்தி நீதியும் இல்லாதவர். சத்தியமும் இல்லாதவர்!’ என்று கூடக் குற்றஞ் சாட்டி, “அரசர்களே இப்படித் தான்!” என்று பொதுவாக ராஜ குலத்தையே பழித்துப் பேசுகிறார்கள்:

‘என்னே நிருபர்
இயற்கை இருந்தவா!
தன்நேர் இலாத
தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து,
முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால்,
பிழையாதோ மெய்?’ என்பார்.

[நிருபர் — அரசர்கள். இருந்தவா — இருந்தவாறு ; இருந்தவிதம். தன் நேர் இலாத — தனக்கு ஒப்பில்லாத. தலைமகற்கு — முதல் புத்திரனுக்கு. தாரணி — பூமி ; (இங்கே) ராஜ்யம். முறை திறம்ப — நீதி தவற. பிழையாத்தா மெய் — சத்தியம் தவறிவிடவில்லையோ.]

தசரதர் கைகேயிக்கு வரம் கொடுத்துத் தம் சத்தியத்தைக் காப்பாற்றிக் கொண்டார் என்று சாதாரணமாக எல்லாரும் சொல்லுகிறார்கள் அல்லவா? இந்தக் கட்சிக்குக் கூட நகரத்தவரில் சிலர் எதிர்வாதம் செய்யத் தணிகிறார்கள். "மூத்த மகனுக்கே இராஜ்ய உரிமை உண்டு ; அவனுக்கு விசேஷமான குறை இருந்தால் தானே தம்பிக்கு அந்த உரிமை இறங்கக் கூடும்? இராமன் எந்த வகையிலும் குறைவற்றவனாக ('தன் நேர் இலாத தலை மகனாக) இருக்கும்போது, அவனுக்கு உரியதைத் தம்பிக்குக் கொடுப்பதால் தசரதர் நீதி தவறி விடுகிறார். மேலும் அவர் இராஜ்யத்தை இராமனுக்கு முன்னே கொடுத்துவிட்டார் ; அதே இராஜ்யத்தைத் தம்பிக்குப் பின்னே கொடுப்பதால் நீதி தவறிய குற்றத்தோடு சத்தியம் தவறும் குற்றமும் சேர்ந்து



இரண்டு குற்றங்கள் ஆகவில்லையா? ஆனால் குற்றம் என்பது சாமானிய மனிதர்களுக்குததானே; அரசர்களுக்கு இல்லையே! அவர்கள் செய்யும் குற்றமும் குற்றமாகுமா? மனிதர் இயற்கை வேறு!'' என்று இவ்வாறு சட்ட நிபுணர்களின் நுண்ணறிவோடு சிலர் வாதித்துச் சிறப்பாகத் தசரதரையும், பொதுவாக அரசர்களையும் நிந்திக்கிறார்கள்.

சத்தியாக்கிரக ஆலோசனையா?


இந்த நிலைமையிலும் ஊரார் கைகேயிக்கோ, பரதனுக்கோ விரோதமாய்க் கலகம் செய்ய உத்தேசிக்கவில்லை. அவர்கள் ஒரு புதிய ஆலோசனை செய்கிறார்கள். அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக்கொண்ட ஆலோசனைதான்:

'பெற்றுடைய மண்அவளுக்(கு)
ஈந்து, பிறந்(து)உலகம்
முற்றுடைய கோவைப்
பிரியாது மொய்த்தீண்டி,
உற்(று)உறைதும் யாரும்;
உறையவே, சின்னாளில்
புற்(று)உடைய கா(டு)எல்லாம்
நாடாகிப் போம்!' என்பார்.

[பெற்றுடைய மண் — தசரதன் கொடுத்துப் பெற்றுக்கொண்ட ராஜ்யம். பிறந்து உலகம் முற்றுடைய கோ — பிறந்த காரணத்தினாலேயே ராஜ்யம் முழுவதக்கும் உரியவனான ராமன். மொய்த்து — நெருங்கி. ஈண்டி — திரண்டு. உற்று உறைதும் — சேர்ந்து வாழ்வோம். உறையவே — (அப்படி) வசிக்கவே. புற்றுடைய — புற்றுக்களையுடைய]

கைகேயி பெற்றிருக்கும் ராஜ்யததை அவளுக்கே விட்டு விட்டு, இவர்கள் ராமனோடு காட்டில் வசிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள். அப்படி எல்லாரும் வசிப்பதனால் காடெல்லாம் நாடாகிப் போம் என்கிறார்கள். இதனால், நாடெல்லாம் காடாகிப் போம் என்பதும் குறிப்பு. அக் காட்டைத்தான் கைகேயி ஆள வேண்டி யிருக்கும் என்பதும் குறிப்பு. இக் குறிப்பிலும், 'மண் அவளுக்கு ஈந்து' என்று கூறுவதிலும் கைகேயி மேல் இவர்களுக்கு உள்ள வெறுப்பு வெளியாகிறது.

அஹிம்ஸா தர்ம சத்தியாக்கிரகம் போன்ற ஒரு ஆலோசனைதான்: எனினும் உள்ளத்திலே அஹிம்ஸை உணர்வு இருக்கிறதென்று எப்படிச் சொல்ல முடியும்? சத்தியாக்ரகத்திலே தாக்கிரகம் துளியும் கலக்கவில்லையென்றுதான் சொல்ல முடியுமா?



156. லட்சுமண கோபம்

நகரமாந்தர்களில் சிலர் — இவர்கள் பெண்களே யென்று ஊகிக்கலாம் — ராமனுக்கு நேர்ந்த வனவாஸத்தை நினைக்க நினைக்கக் கண்ணீர் வடிக்கிறார்கள். கண்ணீர் விட்டுக்கொண்டே நகர் நீங்கி ராமன் போவதற்கு முன் ஒரு தரம் பார்த்து விடலாமே என்று வீட்டுக்குள்ளிருந்து புறப்படுகிறார்கள். கண்ணீர் கண்ணை மறைக்க, கையால் நிலத்தைத் தடவிக்கொண்டே வருகிறார்களாம். அப்போது கண்ணீர் நிலத்தில் விழுவதால் அந்த நிலத்தைக் கண்ணீரால் மெழுகிக்கொண்டு வருகிறார்களே!— என்று கவிஞனும் கண்ணீர் வடிக்கிறான் :

கையால் நிலந்தடவிக்
கண்ணீர் மெழுகுவார்!

சோக வெள்ளமும் கோபத் தீயும

எவ்வளவு சுலபமான தமிழின் மூலமாக எத்தகைய சோக வெள்ளம் வெளிப்படுகிறது, பாருங்கள்! இடை யிடையே, 'உயிரோடும் இருக்கப் போகிறாளா கோசலை?' என்ற புலம்பலும் பெரு மூச்சுடன் வெளிப்படுகிறதாம். இதைக் கேட்டதும் வேறு சிலருக்கு லட்சுமணனுடைய ஞாபகம் வந்து விடுகிறது. அவர்கள்,

'ஐயா, இளங்கோவே!
ஆற்றுதியோ நீ?' என்பார்

[இளங்கோவே — லட்சுமணனே. ஆற்றுதியோ — சகிக்கப் போகிறாயோ.]

"ஐயா, இளவரசாகிய லட்சுமணனே! எப்படித்தான் நீ சகிக்கப் போகிறாயோ?" என்று இவர்கள் அலறுகிறார்கள். இதே சமயத்தில் நகரத்தின் மத்தியிலே 'இது என்ன பயங்கரமான முழக்கம்!' என்று அஞ்சும்படி ஓரே கோஷமாகி விட்டது. ஓஹோ, தீப்போல ஜொலித்துப் பாம்பு போலச் சீறிக் கொண்டிருக்கும் அவன் வேறு யாராகத்தான் இருக்க முடியும்? இளங்கோவாகிய ஸாட்சாத் லட்சுமணனே தான்.

அயோத்தியின் சோகம் லட்சுமண கோபத்தை எப்படி ஜொலிக்கச் செய்துவிட்டது!

கேட்டான் இளையோன்: ‘கிளர் ஞாலம்
வரத்தி னாலே
மீட்டாள், அளித்தாள் வனம்தம்முனை,
வெம்மை முற்றத்
தீட்டாத வேற்கண் சிறுதாய்’ என;
யாவ ராலும்
மூட்டாத காலக் கடைத்தீ
யெனமூண்(டு) எழுந்தான்.

[இளையோன் — இளையவனாகிய லட்சுமணன். கிளர்ஞாலம் — விளங்குகின்ற பூமி; (இங்கே) ராமன் முடி சூடுவான் என்று களித்திருந்த ராஜ்யம். மீட்டாள் - திருப்பிக் கொண்டாள். அளித்தாள் வனம் — காட்டைக் கருணையுடன் கொடுத்தாள். தம்முனை—தமையனை; (இங்கே) தமயனுக்கு. தம்முன் — தமையன். வெம்மை — கொடுமை. முற்ற — முதிர. தீட்டாத வேல்கண் — (நெருப்பிலே காய்ச்சிக்) கூராக்காத (இயற்கையிலேயே மிக்க கூர்மையான) வேலாயுதம் போன்ற கண்கள். சிறு தாய் — கைகேயி. காலக் கடைத்தீ—கடைசிக் காலமாகிய பிரளய காலத்துத் தீ; ஊழித் தீ.]



யுத்த சன்னத்தம்

கைகேயி ராஜ்யத்தை வரத்தினால் கவர்ந்து கொண்டதையும், அண்ணனுக்கு வனவாஸம் விதித்ததையும் கேள்விப் பட்டான் லட்சுமணன். “அளித்தாள் வனம்”—அடடா, என்ன அருள்! — என்று கொதிக்கிறது உள்ளம். “தீட்டாத வேல்-கண் சிறுதாய்” - பலே சாகஸக்காரி! — என்று தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான். ஊழித் தீயைப் போல ஜொலிக்கிறது லட்சுமண கோபம்.

கோபாக்கினி எவ்வளவு உக்கிரமாக நெற்றியில் ஒளி வீசிக் கடைக்கண்களின் வழியாக ஒழுகுகிறது!

சுற்ருர் மணியின் வடிவாள்
புடைதோன்ற ஆர்த்து,
வில்தாங்கி, வாளிப் பெரும்புட்டில்
புறத்து வீக்கி,—

[சுற்றுஆர் மணியின் வடிவாள் - நான்கு பக்கங்களிலும் இழைத்த மணிகளையுடைய கூர் செய்த கை வாள். புடை — பக்கத்தில். ஆர்த்து — கட்டி. வாளி — அம்பு. பெரும்புட்டில் — அம்பருத்தூணி. புறத்து — பின் புறத்தில். வீக்கி — கட்டி.]

— யுத்த சன்னத்தமாகி விட்டான் லட்சுமணன்.

வாளையும் வில்லையும் அம்பருத்தூணியையும் தரித்து ஒரே கோபா வேசமாய்க் குமுறுகிருன், "பூமிதேவிக்குப் பாரம் அதிகமாய்ப் போய்விட்டது, அதைத் தீர்க்க வேண்டாமா?" என்று :

புவிப்பாவை பரங்கெடப், போர்உவந்
தோரை யெல்லாம்
அவிப்பானும், அவித்(து)அவர் ஆக்கையை
அண்டம் முற்றக்
குவிப்பானும், எனக்(கு)ஒரு கோவினைக்
கொற்ற மௌலி
கவிப்பானும், நின்றேன்; இது காக்குநர்
காமின்!' என்ருன்.

[புவிப்பாவை — பூமிதேவி. பரங்கெட — பாரம்நீங்க. போர் உவந் தோரை — போரில் பிரியம் உள்ளோரை யெல்லாம். அவிப்பானும் — அழிப் பவனும். ஆக்கை — உடம்புகள்; (இங்கே) பிரேதங்கள். அண்டம் முற்ற — பூமி நிறைய. எனக்கு ஒரு கோவினை — எனக்குச் சக்ரவர்த்தியாக இருக்கிற ராமனை. கொற்ற மௌலி — ராஜ கிரீடம். கவிப்பானும் — சூட்டுபவனும். காக்குநர் காமின் — தடுக்கக்கூடியவர் தடுத்துப் பார்க் கட்டும்.]

இப்படிப் போர்க் கோலம் பூண்டு அறை கூவி,

ஊனும் உயிரும் உடையார்கள்
உடைந்(து)ஒ துங்க,—

[ஊன் — உடம்பு.]

வில் நாணை இழுத்து டங்காரம் செய்கிருன். "இந்தக் கோபாவே சத்திற்கு முன் ஊனும் உயிரும் சேர்ந்திருப்பது ஆபத்தேயாகும்; உயிர் பிரிந்த உடலும், உடல் துறந்த உயிருமே தப்ப முடியும்!" என்று அஞ்சு கிறேம்.

வீர கர்ஜனை

கவிஞனேடு நாமும் ஒதுங்கி நின்று பார்க்கிறேம். "போரில் விருப் பமும் உயிரில் வெறுப்பும் உள்ளவர்களே! வாருங்கள்; வந்து பாருங்கள்; இந்த அம்புப் பசிக்கு இரை தாருங்கள். பூமிக்குப் பாரம் தீரும்படி உங்

களை யெல்லாம் பைசல் செய்து வெற்றியினால் கிடைத்த மகுடத்தை என் சக்ரவர்த்திக்குச் சூட்டப் போகிறேன். தடுக்கும் வல்லமை யுள்ளவர்கள் எல்லாம் தடுத்துப் பார்க்கட்டும்! '' என்ற வீர வாதத்தைக் கேட்கிறோம்.

பெண்ஆட்டம் ஒட்டேன் இனிப்
பேருல- கத்துள்


[ஒட்டேன் – இடங் கொடுக்க மாட்டேன். பேருலகத்துள் – இந்தப் பெரிய உலகத்திற்குள்.]

அதாவது, இனி இந்த உலகத்தில் பெண்கள் ஆட்டம் போடுவதற்கு இடங் கொடுக்க மாட்டேன்! — என்ற வீர கர்ஜனையையும் கேட்கிறோம்.

இளைய வீரனது கவசம் பூண்ட பொன்மேனி, பால சூரியன் வீசும் பொன்னிறக் கதிர்களிலே தகதகவென்ற எதிரொளி செய்கிறது. பொன்னொளியைக் கடைந்தெழும் மின்னொளிபோல விட்டு விளங்கும் சீற்றம், அந்தக் காலை வேளையிலேயே கதிரவன் உச்சி அடைந்தாற் போன்ற வெம்மையைக் காட்டுகிறது.

* * *

இடிமேல் இடி இடித்தாற் போன்ற வில் நாணின் டங்காரம் சுமித்திரையைத் தேற்றிக் கொண்டிருந்த ராமன் செவியில் விழுகிறது. லட்சுமண கோபத்தை ஆற்றுவதற்கு ராமன் வருகின்ற தோரணையை இனிமேல் பார்க்கலாம்.



157. கனலும் மேகமும்

ராமன் நடந்து வரும்போது ஆபரணங்கள் வான வில்லின் வர்ண ஜாலம் காட்டுகின்றன. முத்து மாலை நீலமேகத்தின் இடையே தோன்றும் மின்னலைப் போலப் பளிச்சுப் பளிச்சென்று மின்னுகிறது. அவன் வழங்குகின்ற இனிய சொற்களோ நீல வானத்திலிருந்து மிருதுவாக இறங்கும் மழைத் துளிகள் போல வருகின்றன. லட்சுமணனோ, கடுங்காற்று மோதித் தாக்க நிமிரும் பெரு நெருப்பைப் போலப் புகைந்து கனன்று பொங்கிக் கொண்டிருக்கிறான். 'இந்த ஆறாத தீயை ராமன் என்ற மேகம் எப்படித்தான் ஆற்றப் போகிறதோ?' என்று அதிசயிக்கிறோம்.

கனலை நோக்கிய மேகம்

இதோ பாருங்கள் ராமன் வருகின்ற காட்சியையும், தம்பி நிற்கும் ஆவேச நிலையையும் — ஆம், இந்தக் கவிதைக் கண்ணாடி வாயிலாகப் பாருங்கள் :

வீறுக்கிய பொற்கலன் வில்லிட,
　　ஆரம் மின்ன,
மாறாத் தனிச்சொல்—துளிமாரி
　　வழங்கி வந்தான்,
கால்தாக்க நிமிர்ந்து, புகைந்து,
　　கனன்று பொங்கும்
ஆறாக் கனல்ஆற்றும்ஓர் அஞ்சன
　　மேகம் என்ன !

[வீறு — வேறு ஒரு பொருளுக்கும் இல்லாத அழகு. வீறு ஆக்கிய — வேறு ஆபரணங்களுக்கு இல்லாத அபூர்வ வேலைப்பாட்டோடு கூடிய, பொற்கலன் — பொன் ஆபரணங்கள். வில்இட — கிரணங்களை வீச. ஆரம்—(கழுத்தில் அணிந்த) முத்து மாலை முதலான ஆபரணங்கள். மாறா — மறக்க முடியாத. தனி — ஒப்பற்ற. சொல்-துளிமாரி — சொல்லா

கிய மழைத் துளிகள். கால் — காற்று. ஆருக்கனல் — மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருக்கும் நெருப்பு. ஆற்றும் — தணிக்கும். அஞ்சன மேகம் என்ன — நீல மேகம் போல.]

'சுடவே துணிந்தேன்!'

ராமன் லட்சுமணனை நோக்கி, "என் அப்பனே! நீ யுத்த சன்னத்தனாகி வில்லும் கையுமாக இவ்வளவு பெருஞ்சினத்துடன் நிற்பதற்குக் காரணம் என்ன?" என்று கேட்கிறான். அதற்கு லட்சுமணன் 'போர்க்கோலம் கொள்ளுவதற்குக் காரணம் இருக்கத்தான் செய்கிறது!' என்று பதில் சொல்லுகிறான்:

மெய்யைச் சிதைவித்து,நின் மெய்ம்முறை
    நீத்த, நெஞ்சம்
மையில் கரியாள்எதிர்,நின்னைஅம்
    மௌலி சூட்டல்
செய்யக் கருதித் தடைசெய்குநர்
    தேவ ரேனும்,
துய்யைச் சுடுவெங் கனலின்
    சுடுவான் துணிந்தேன்.

[மெய்யைச் சிதைவித்து — சத்தியத்தைக் கெடுத்து. நின் — உன் மெய்ம்முறை — உண்மையான உரிமையாகிய அரசு முறைமை. நீத்த — நீக்கின. நெஞ்சம் மையில் கரியாள் — மை போன்று இருண்ட நெஞ்சத்தோடு கூடிய கைகேயி. எதிர் — கண்ணெதிரே. நின்னை — உன்னை. அம்மௌலி — அந்தக் கிரீடம். செய்குநர் — செய்பவர். துய்யை — பஞ்சுப் பொதியை. கனலின் — தீப்போல. சுடுவான் — சுடுதற்கு]



கைகேயி மீதுள்ள லட்சுமண கோபம் எப்படி வெளிப்படுகிறது பாருங்கள்? சத்தியத்தை அழித்து ராமனுடைய சத்தியமான அரசுரிமையைப் பறித்துக் கொண்ட அந்த நெஞ்சம் மைபோல் இருண்டுகிடக்கிறதாம். "அந்தக் கரியவள் கண்ணெதிரே உனக்கு அந்த ஒளிமயமான கிரீடத்தைச் சூட்டிப்பார்க்க வேண்டுமே

ன்ற ஆசைதான் என் நெஞ்சிலே ஆறாக் கனலாகக் கிடக்கிறது!" என்கிறான் தம்பி. "அதற்குத் தடை செய்கிறவர்கள் யாரானாலும், அவர்களைப் பஞ்சுப் பொதியை எரிக்கின்ற கொடிய தீபபோலச் சுட்டு எரித்து விடுவேன்!" என்று சொல்லும் அந்த நெஞ்சுத் துணிவிற்கு உயிர்நிலையாக இருக்கும் சகோதர பக்தியையும் சத்தியக் காதலையும் தர்மாவேசத்தையும் பாருங்கள்.

சுடுவது தர்மத்தையா?

அது கேட்ட ராமன் மெள்ளச் சொல்லுகிறான்: "அப்பா, லட்சுமணா! உன்னுடைய புத்தி யெல்லாம் நீதியோடு கலந்த நன்னெறியிலே செல்லும் புத்தியல்லவா? அப்படியிருக்க, அழியாத தர்மத்தையும் அழிக்கத் துணிந்த இந்தக் கடுங்கோபம் என் முளைத்தது? எப்படி விளைந்தது?"

இப்படி ராமன் கேட்கவும் லட்சுமணனுக்குச் சிரிப்பே வந்து விடுகிறது. "அண்ணா! நீ ஏதோ தந்தை தந்தையென்று சொல்லிக்கொண்டிருப்பாயே, அந்தப் பெரியவர் இந்த ராஜ்யத்தை உனக்குக் கொடுத்தது உண்மைதானே, தர்மந்தானே? அந்த ராஜ்யத்தை நீ பகைவர் சூழ்ச்சியால் இழந்து வனம் போவதும் உண்மைதானே? ஆனால் இதுதான் தர்மமா? இந்த நிலையில் அடியேனுக்குக் கோபம் வருகிறதும் அதிசயம் தானா? இப்பொழுது வராமல் வேறு எப்பொழுதுதான் எனக்குக் கோபம் வரவேண்டுமோ?" என்று பதில் சொல்லுகிறான் கோபச் சிரிப்புடன்.

புண்பட்ட உள்ளங்கள்

மேலும் மிக்க வருத்தத்தோடு பேசுகிறான்; "உன்னிடத்தில் அன்பில்லாதவர்கள், இரக்கமில்லாதவர்கள், உன்னை வனத்திற்கு அனுப்பி விட்டார்கள். எந்தக் கண்ணால் உனக்கு ராஜ்யம் கொடுத்ததைக் கண்டேனோ, அதே கண்களால் ஈந்து வைத்து இல்லையென்றதையும் காண்கிறேன். நான் இதையும் பார்த்துக்கொண்டு அந்த மன்னவன்போல உடலையும் உயிரையும் ஒருங்கே பாதுகாப்பாக வைத்துக்கொண்டிருப்பேனோ? சரி, சரி; அழகு அழகு!"

இப்படி லட்சுமணன் புண்பட்ட உள்ளத்துடன் பேச, ராமனுள்ளம் பெரிதும் புண்பட்டு விட்டது. தந்தையைப் பற்றித் தம்பி எவ்வளவு இழிவாகப் பேசி விட்டான்! சிறிய தாயையோ பெரிய சூழ்ச்சிக்காரியென்றே நினைத்து விட்டான்! தொலை தூரத்தில் மாமன் வீட்டிலே போயிருக்கும் பரதனையும் சதியாலோசனையிலே கலந்து கொண்ட பகைவனாகவே கருதி விட்டான் போலும்!

இப்படியெல்லாம் எண்ணியெண்ணிப் புண்ணான ராமனுள்ளம் மிக்க உணர்ச்சியுடன் லட்சுமணனுள்ளத்தைச் சாந்தப்படுத்த முயல்கிறது. நதியை உபமானமாகக் கொண்டு விதியைக் குறித்துப் பேசி லட்சுமணனைச் சமாதானப் படுத்தப் பார்க்கிறான் கருணை மேகமான ராமன்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

158. நதியா, விதியா?

சுடுங் கோடை. ஆறு ஒரே மணற் காடாய்க் காண்கிறது. அக் கரை ஓரமாக வந்து கொண்டிருக்கிறான் ஒரு பிரயாணி. வெயிலில் நடந்து வரும் களைப்பினால் அவனுக்குத் தாகம் அதிகரிக்கிறது. சுடு மணலில் நடந்து சென்று, 'எங்கேயாவது நீரோட்டம் இருக்கிறதா? ஊற்றாவது தென்படுகிறதா? ஈர மணல் காணப்பட்டாலும் தோண்டிப் பார்க்கலாமே' என்று அங்குமிங்கும் பார்க்கிறான். ஏதோ அழுக்குத் தண்ணீர் தேங்கிய குட்டம் காணப்பட்ட போதிலும்,, நல்ல தண்ணீர் கிடைக்கும் அறிகுறியே இல்லை. யாத்திரிகன் கடுங் கோபத்துடன், "அட பாவி நதியே! என்ன அநியாயம் பண்ணுகிறாய்? மரண தாகமாய் இருக்கிறதே! கொஞ்சம் நல்ல தண்ணீர் உதவலாகாதா? நீ நாசமாய்ப் போ!" என்று திட்டுகிறான்.

நதிமீது கோபமா?

உண்மையில், நல்ல தண்ணீர் இல்லாமல் வற்றி வரண்டு கிடப்பது நதியின் குற்றமா?

நதியின் பிழைஅன்று
நறும்புனல் இன்மை

[நறும்புனல் — நல்ல தண்ணீர்.]

என்கிறான் ராமன். தாக வெறியுடன் நதியைத் திட்டும் பிரயாணியை நோக்கியா இப்படிச் சொல்லுகிறான்? இல்லை, லட்சுமணனை நோக்கித்தான்.



என்? லட்சுமணன் தந்தை மீது குற்றம் சாட்டினான்; கைகேயியைப் பெருங் குற்றவாளி யாக்கிப் பேசி விட்டான். பரதன் கூடச் சதியாலோசனையில் கலந்து கொண்டது போ

லக் கருதி அவனையும் மறை முகமாகத் தாக்கிப் பேசினன். அந்தப் பெருங் கோபத்தைத் தணிக்க வேண்டுமென்று தான் ராமன், 'ஏராள மான நல்ல தண்ணீரை மலையிலிருந்து கொண்டு வந்து மக்களுக்கு ஊட்டி நாட்டை வளமுறச் செய்யும் நதி—மாதா அருங்கோடையில் தண்ணீர் வற்றி வரண்டு கிடந்தால், அது அதன் குற்றமா?' என்று மெள்ளக் கேட்கிறான்.

"பாவி நதியே! மோசஞ் செய்து பயிர் பச்சைகளையும் ஆடு மாடுக ளையும் மக்களையும் நாசஞ் செய்யப் பார்க்கிறாயே!" - என்று வைவதில் ஏதா வது பொருளுண்டா? அப்பா, லட்சுமணா! நீயே சொல்லு" என்று கேட்பது போல் லட்சுமண கோபத்தைத் தன் அறிவுப் பெரும் புனலால் அவிக்கப் பார்க்கிறான்.

நதியும் விதியும்

நதியில் தண்ணீர் வர வேண்டுமென்றால் மலையில் மழை பெய்ய வேண்டும். அதற்குக் காற்று மேகங்களை மலைப் பக்கமாக அடித்துக் கொண்டு வர வேண்டும். மேகங்கள் அப்படி வருவதற்கு அனு கூலமான காற்று வீசவேண்டும். பிரதிகூலமான காற்று மேகங்களை வேறு எங்கேயாவது கொண்டு போய் விடும். மேலும், கடல்நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகப் பரிணமித்து அந்த நீராவி மேகம் ஆக வேண்டும். இத்தகைய காரணங்களால் மலையிலே மழை பெய்யும் போது அவ்வளவு நீரையும் கொண்டு வந்து கொடுக்க ஆறு தயாராகத் தானே இருக்கிறது? இத்தகைய இயற்கைக் காரணங்கள் ஏற்படாவிட்டால் நதியில் தண்ணீர் இல்லாமல் தானே போகும்? "அது போலவே உலகில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் காரணங்கள் உண்டு" என்கிறான் ராமன்.

தான் முடி துறந்து காடு செல்வதற்கும் பல காரணங்கள் இருக்க வேண்டும் என்கிறான். காரணம் இல்லாமல் காரியம் ஏது? இந்தக் காரண காரிய முறையை விதி என்பர் அறிஞர். "குழந்தாய்! விதியின் விளைவைக் குறித்து நீ கோபித்துக் கொள்வதில் யாது பயன்?" என்று லட்சுமணனை ராமன் சமாதானப் படுத்த முயலுகிறான்.

ஒரு சங்கிலி

நல்ல தண்ணீர் கொடாமல் இருப்பது நதியின் பிழையாக ஏற்படா தது போல் தன்னைக் காட்டுக்கு அனுப்புவதும் சக்ரவர்த்தி முதலானவர் களின் பிழையன்று என்கிறான். விதியை உருவாக்கும் காரண காரியம் என்றச் சங்கிலித் தொடரால் கட்டப்பெற்றிருக்கிறார்களாம் தசரதன் கைகேயி முதலானவர்களெல்லாம்:

"நதியின் பிழைஅன்று நறும்புனல்
இன்மை: அற்றே
பதியின் பிழைஅன்று, பயந்து
நமைப் புரந்தாள்
மதியின் பிழைஅன்று, மகன்பிழை
அன்று, மைந்த!
விதியின் பிழை,நீ இதற்(கு)என்னை
வெகுண்ட(து)?" என்றான்.

[நறும் புனல் இன்மை—நல்ல தண்ணீர் இல்லாமலிருத்தல். அற்றே — அது போலவே. பதி — சக்ரவர்த்தி; தந்தை. பயந்து — பெற்று. நமைப் புரந்தாள் — நம்மைப் போற்றி வளர்த்தவள். மதியின் பிழை அன்று — புத்தியின் குற்றமும் அன்று. மகன் — அவன் மகனாகிய பரதன். மைந்த—குழந்தாய்; இளையவனே. என்னை — என்ன. வெகுண்டது — கோபங் கொண்டது.]

தந்தைக்குச் சிற்றன்னை ஒரு காலத்தில் தனிப்பெரும் பணி செய்தது, அவளுக்கு அவர் அந்நாளில் வரங் கொடுத்தது, அந்த வாய்மையைக் காப்பாற்றும் நிர்ப்பந்தம் இந்நாளில் ஏற்பட்டது — இத்தகைய செயல்களுக் கெல்லாம் எத்தனையோ சங்கிலித் தொடரான காரணங்கள். ஆகவே, தசரதர் பிழை அன்று என்கிறான் ராமன்.

மதியின் பிழையன்று

அப்படியே கைகேயி அம்மாளின் மதியிலும் பிழை இல்லை என்கிறான். அந்த மதி அப்படி மாறுபட்டதற்கும் எத்தனையோ காரணங்கள்—வெளிப்படையான காரணங்களும், அடிப் படையான மூல காரணங்களும் — இருக்க வேண்டுமல்லவா? கூனி சூழ்ச்சி போதுமா கைகேயி சூழ்வினைக்கு?

கைகேயி மதியின் பிழையன்று என்று கூறும் ராமன், அவளைச் சிற்றன்னையாகவோ, அன்னையின் சக்களத்தியாகவோ எண்ணி விடாமல், தங்களைப் பெற்று வளர்த்த தாயாகவே — கோசலை வேறு கைகேயி வேறு என்ற வேற்றுமை



யில்லாமல்—நினைக்க வேண்டு மென்கிறான். அப்படி நினைத்து விட்டால் அந்த மதியில் அப்படிப் பிழை காண முடியாது என்பது ராமன் கருத்து.

பரதன் ஊரிலேயே இல்லாததால் அவன் பிழை ஒன்றுமில்லை என்பது வெட்ட வெளிச்சம். எப்படி அவன் பிழை இல்லையோ, அப்படியே தசரதர் பிழையு மில்லை, கைகேயி பிழையு மில்லை என்று கூறும் நயம் கவனிக்கத் தக்கது.

எய்தவன் இருக்க அம்பை நோவது போல், விதியின் கருவிகளான தசரதர் முதலானவர்களை நொந்து கொள்வதிலோ, நோகப் பேசிக் கோபிப்பதிலோ காரியம் இல்லை என்று வற்புறுத்துகிறான் ராமன்.

ராமனது பெருங் கொள்கையை லட்சுமணன் அறிந்து, கொள்ளவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அந்த வாழ்க்கைத் தத்துவத்தைக் கொண்டு கோபத்தை அடக்கப் பார்த்தும் அது அடங்கிய பாடில்லை. கொதித்துக் கொண்டிருக்கும் உள்ளம் எளிதில் சமாதானமடையுமா?

* * *

ராமன் கொள்கையைத் தற்கால உலகம் உள்ளபடி உணர்ந்து கொள்ளுமானால், நமது வாழ்க்கையே புரட்சிகரமான மாறுதல் அடையக் கூடுமல்லவா?

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

159. விதிக்கும் விதி!

'முயற்சி இன்றியமையாதது, மதிவலிது; எனினும் இவை விதியை உருவாக்கும் ஒரு பகுதி தான்' என்பது ராமன் கொள்கை. லட்சுமணனோ, அடக்க அடக்கக் கோபம் குபீரென்று பொங்கி வர, "இதோ இந்த என் கையில் விதிக்கும் விதியாகும்; விதியையும் கடக்கக் கூடிய வாழ்க்கைத் தத்துவம் இந்த வில்–தொழில், இந்த வில் முயற்சி தான்!" என்கிறான்.

'விதிக்கும் விதியாகும்என் வில்–தொழில்
காண்டி!' என்றான்.

[காண்டி – காண்பாயாக.]

அன்பும் கோபமும்

ஆனால், துருத்தி வைத்து ஊதியதும் கொல்லுலையிலிருந்து நெருப்பும் புகையும் குபீர் குபீரென்று பொங்கி வருவதுபோல வெளிப்பட்டு வந்த லட்சுமண கோபத்திற்கெல்லாம் காரணம் ராமன் மீதுள்ள பேரன்பு அல்லவா? இதை நன்குணர்ந்த ராமன்,

வாய்தந் தனகூறு தியோமறை
தந்த நாவால்?

[வாய்தந்தன – வாய்க்கு வந்த வார்த்தைகள். கூறுதியோ – சொல்லுகிறாயோ. மறை – வேதம். நாவால் – உன் நாக்கினால்.]



என்று இளையவனை நோக்கிக் கேட்கிறான். "அப்பா! நீ வாய்க்கு வந்த வார்த்தைகளை இப்படிப் பேசி விடலாமா?" ('வாய்தந்தன கூறுதியோ?') என்று கண்டித்துப் பேசியதும், அந்தப் பேரன்பை அப்படிக் கன்

டிப்பது சரியன்று எனக் கருதியது போல், ' 'மறைதந்த நாவால்' என்றும் சேர்த்துச் சொல்லுகிறான். "உன் வாயிலிருந்து வருவது வேதமாக இருக்குமே; அந்த நாவினால் அப்படி யெல்லாம் பேசலாமா?" என்று பெரும் பரிவுடன் பேசுகிறான்.

மேலும், "கோபம் கூடாதல்லவா? சாதாரண மக்களையே கோபிக்கக் கூடாது. தாய் தந்தையர் என்றால் கோபித்தல் கூடவே கூடாது" என்றும் அறிவுறுத்துகிறான்:

தாய்தந்தை யென்றால் அவர்மேல்
சலிக்கின்ற(து) என்னோ?

[சலிக்கின்றது — கோபிப்பது. என்னோ — எவ்வாறோ.]

'பெற்ற தாய் தந்தையர்மேல் கோபிப்பது தகாது' என்று ராமன் சொன்னதும், உடனே லட்சுமணன், "அண்ணா! நீயே எனக்குத் தந்தையும் தலைவனுமாக இருக்கிறாய்; பத்து மாதம் என்னை வயிற்றில் சுமந்து பெற்ற தாயும் நீ தான்!" என்று உருக்கமாய்ப் பேசுகிறான்:

நற்றா தையும்நீ, தனிநாயகன்
நீ, வ யிற்றில்
பெற்றாயும் நீயே! பிறர்இல்லை,
பிறர்க்கு நல்கக்
கற்றாய்! இதுகாணுதி இன்று!

[நற்றாதை — நல்தாதை; நல்ல தந்தை. தனி நாயகன் — ஒப்பற்ற தலைவன். பெற்றாயும் — பெற்ற தாயும். நல்க — கொடுக்க. இது காணுதி — இந்த வில்லின் தொழிலைக் காண்பாயாக. இன்று — (இங்கே) இப்போது.]

என்று அண்ணன் வார்த்தையைத் தடுத்து எவ்வளவு பக்திப் பெருக்கமும் உருக்கமுமாய்ப் பேசுகிறான்!

"எனக்குத் தந்தையும் தாயும் தலைவனுமாக இருப்பது நீயே; பிறர் இல்லை!" என்று உறுதி கூறும் லட்சுமணனுடைய மனநிலை ராமனைத்தான் எவ்வளவு தூரம் மனம் உருகச் செய்திருக்க வேண்டும்! "இப்படிப்பட்ட நீ பிறருக்குக் கொடுக்கக் கற்றிருக்கின்றாய்!" என்று கைகேயிக்கு நாடு கொடுத்துக் காட்டுக்குப் புறப்பட்ட அந்தத் தியாக புத்தியைத் தான் எவ்வளவு உருக்கமாய்ச் சுட்டிக் காட்டுகிறான் இளையவன்!

நெஞ்சுக் கொதிப்பு ஏன்?

இப்படிப் பேசிப் 'பிறருக்குக் கொடுத்துக் கொடுத்துப் பயிற்சி பெற்றிருக்கும் அந்தக் கைலாகவத்தை'ப் புகழும்போதே நெஞ்சுக் கொதிப்பு மறுபடியும் வெளிப்படுகிறது. உடனே "உன்னைத் தவிர வேறொரு கதியும் இல்லாத நான் இப்போது காட்டப்போகும் என் செயல் — திறமையை நீ பார்க்கத்தான் வேண்டும்" என்கிறான். இச் செய்யுளில் கைகேயியையும் பரதனையும் "பிறர்" என்று குறிப்பிடுவதும் இளையவனுடைய நெஞ்சுக் கொதிப்பையே காட்டுகிறது.

இது கேட்ட ராமன், "தம்பி! உன் கோபத்துக்கு இலக்கு ஆகிறவர் யார் என்று ஆலோசித்துப் பார். ஒரு குற்றமும் அறியாத பரதனைப் போர் செய்து தொலைத்து விடப் போகிறாயா? அவன்தான் தூர தேசமாகிய கேகய நாட்டில் மாமா வீட்டுக்குப் போயிருக்கிறானே; ராஜ்ய சம்பந்தமான எப்பேர்ப்பட்ட ஆலோசனையும் இல்லாமல் எங்கேயோ இருக்கிற உன் தமையனோடு போரிடவா நீ ஆலோசிக்கிறாய்?'' என்று கேட்கிறான்.

மேலும் ராமன் பேசுகிறான்: "பரதனுக்கு இராஜ்யத்தை வரமாகக் கொடுத்த கிழத் தந்தையை—ராஜ்யத்தை விட்டுத் தவம் செய்ய உத்தேசிக்கும் தந்தையை — வென்றொழித்து வெற்றிமாலை சூடப் பார்க்கிறாயா? அன்றி, பெற்ற தாயோடுதான் வீரம் காட்டிப் போர் புரிந்து வெற்றி பெறப் போகிறாயா? இந்த விதமாகத்தான் கோபம் தீரப் போகிறதா?"

ஆன்றான் பகர்வான் பினும், 'ஐய!
இவ்வைய மையல்
தோன்றா நெறிவாழ் துணைத்தம்
பியைப்போர் தொலைத்தோ?
சான்றோர் புகழும் தவத்தாதையை
வாதை கொண்டோ?
ஈன்றாளை வென்றோ, இனி இக்கதம்
தீர்வது?' என்றான்.

[ஆன்றான்—ஆராய்ந்து அமைந்த அறிவு வாய்ந்த ராமன். தோன்றா நெறி வாழ் — தோன்றாத நன்னெறியில் வாழ்கின்ற. துணைத்தம்பி — துணையாகிய தம்பி; ராமனுக்குத் தம்பியும் லட்சுமணனுக்கு அண்ணனுமாகிய பரதன். சான்றோர் — சிறந்த பெரியோர். தவத்தாதை — தவஞ் செய்யப் போகும் அல்லது தவசிபோலிருக்கும் தந்தை. வாதை கொண்டோ — உள்ளம் புண்படச் செய்தோ. ஈன்றாள் — கைகேயி. கதம் — கோபம்.]



இவ்வளவு கடுமையாக, லட்சுமணன் எதிர் வார்த்தை சொல்ல முடியாதபடி, வாயை அடைப்பதுபோல் பேசித் தீர்க்கிறான் ராமன். தம்பி இத்தகைய அண்ணன் சொல்லுக்குக் கட்டுப்படத்தான் செய்கிறான். எனினும் நெஞ்சு புழுங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

160. தாய்ப்பாலோடு பருகிய தியாகம்

உள்ளத்தில் உள்ள உண்மை ஒளி வாக்கிலே பிரகாசிக்க, எண்ணிய நற்காரியம் இனிது கை கூடும் வண்ணம் பேசி முடிக்கும் திறமை வாய்ந்த ராமனுக்கு எதிராக, அவனுக்கு உகந்தபடி நடப்பதே புருஷார்த்தம் என்று நம்பும் தம்பி அண்ணன் சொல்லை மறுத்துப் பேசுவது எப்படி? அண்ணனுக்கு இணங்கத்தான் செய்கிறான்; கோபத்தையும் விட்டுவிடத்தான் பார்க்கிறான். புழுங்கிக் கொண்டிருக்கும் உள்ளத்திலிருந்து குமுறி வருகின்றன வார்த்தைகள்:

செல்லுஞ்சொல் வல்லான்எதிர் தம்பியும்,
  "தெவ்வர் சொல்லும்
சொல்லும் சுமந்தேன், இருதோள்எனச்
  சோம்பி ஓங்கும்
கல்லும் சுமந்தேன், கணைப்புட்டிலும்
  கட்(டு)அ மைந்த
வில்லும் சுமக்கப் பிறந்தேன்,
  வெகுண்(டு)என்னை?" என்றான்.

[செல்லும் சொல் வல்லான் — இதயத்திலே சென்று பதியும்படியாகப் பேசக்கூடிய ராமன். எதிர் — எதிர் வார்த்தையாக. தெவ்வர் — பகைவர். சொல்லும் சொல்—பழித்துச் சொல்லும் சொல். சோம்பி—பயனில்லாமல்; அதைகயை அடக்க வீரச் செயல் ஒன்றும் புரியாமல். கணைப்புட்டில்—அம்பாறாத்தூணி. கட்டு அமைந்த — இறுகக் கட்டிய. வெகுண்டு என்னை — கோபித்துப் பயன் என்ன?]



பகைவர்கள் சொல்லுவர்களாம், 'பரதன் தான் துரோகியா? லட்சுமணனும் துரோகி தான்!' என்று. "அந்தப் பழிச் சொற்களையும் சுமந்தேன்!" என்று இறந்த காலத்தில் சொல்லுகிறான், அவ்வளவு விரைவில் அந்த நிலை ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்துடன்.

அந்தப் பழிச் சொற்களைச் சுமப்பதோடு, "இரு தோள் எனச் சோம்பி ஓங்கும் இரண்டு கல்லையும் சுமந்தேன்!" என்கிறான். அவற்றோடு, அம்புகளையும் அம்பறாத் தூணியையும், உறுதியாகக் கெட்டிய வில்லையும் சுமக்கப் பிறந்தேன்!" என்று பெருமூச்சு விடுகிறான்.

"விதியின் பிழைக்கு வெகுண்டு பயன் என்ன?" என்று கேட்டான் ராமன். "பழிச் சொற்களோடு இரண்டு தோளும் அம்புப் புட்டிலும் வில்லும் சுமக்கப் பிறந்த நான் வெகுண்டு என்ன பயன்?" என்று லட்சுமணன் பதில் சேள்வி கேட்கிறான். தன்னைத் தானே வெறுத்துக் கொண்டு அடங்காத கோபத்தை அடக்கப் பார்க்கும் லட்சுமணனைப் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம், இந்தக் கவிதைக் கண்ணாடி வாயிலாக.

இப்படிப்பட்ட தம்பி ராமனுக்காக எத்தகைய தியாகமும் செய்து விடுவான் என்று நாம் முன் கூட்டியே ஊகிக்கக் கூடும். இனி இவன் தாயார் இவனுக்குச் செய்யும் உபதேசத்தைக் கேட்போம்:

அண்ணனுடன் காட்டுக்குப் போக வேண்டுமென்று லட்சுமணன் தன் தாயாகிய சுமித்திரையிடம் விடை கேட்கிறான். உடனே தாய், "குழந்தாய்! நீ ஏன் போக வேண்டும்? சக்ரவர்த்தியாவது சக்களத்தியாவது உன்னைக் காட்டுக்குப் போகும்படி உத்தரவு செய்ய வில்லையே?" என்று சொல்லவில்லை. "அண்ணன் தான் அநியாயமாய்க் காட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது; நீயாவது இங்கே இருந்து தாய்மாராகிய என்னையும் கோசலையையும் தேற்றிக் கொண்டிருக்கலாகாதா?" என்றும் சொல்ல வில்லை.

"மகனே! வனமே உனக்கு அயோத்தி" என்கிறாள். "தந்தையும் அரசனும் ராமன் தான்; சீதையே உன் தாய்!" என்றும் சொல்லுகிறாள்.



" இனி இங்கே தாமதிப்பதும் குற்றம் !" என்கிறான். " எப்பேர்ப்பட்ட தாயார் ! எப்பேர்ப்பட்ட மகன் !" என்று ஆச்சரியம் அடைகிறோம்.

கேளுங்கள் இந்த அதிசயத் தாயின் அதிசய வார்த்தைகளை :

" ஆகாத(து) அன்றால்உனக்(கு) அவ்வனம்
இவ் அ யோத்தி ;
மாகாதல் மன்னன் இவன்;வையகம்,
ஈந்து வானில்
போகா இருதாயாரும் பூங்குழல்
சீதை ; என்றே,
ஏகாய்;இனி இவ்வயின் நிற்றலும்
ஏதம் !" என்றாள்.

[மாகாதல் மன்னன் — உன்னிடம் பெருங் காதலையுடைய சக்ரவர்த்தியாக நீ இனி மதிக்க வேண்டியது இந்த ராமனைத்தான். வையகம்— ராஜ்யம். ஈந்து — கொடுத்துவிட்டு. வானில் — வானுலகத்திற்கு. போகா இரு தாயாரும் — போகத் தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிற கோசலையும் நானும். பூங்குழல் சீதை — பூவை அணிந்த கூந்தலையுடைய சீதை. ஏகாய் — போவாயாக. இவ்வயின் — இவ்விடத்தில். ஏதம் — குற்றம்.]



தன்னையும் கோசலையையும் சுமித்திரை, "வையகம் ஈந்து வானில் போகா இரு தாயாரும்" என்று குறிப்பிடுகிறாள். ராஜ்யத்தைக் கைகேயிக்குக் கொடுத்தோம் : அவன் ஆளப் பிறந்தான், வாழப் பிறந்தாள் ! வையக வாழ்வை இழந்த எங்களுக்கு இனி வானுலகம் போக வேண்டியதுதான் கதி ! அதற்கும் வழி தெரியாமல் இருக்கிறோம் !" என்ற மன உளைச்சல், இதய தாபம், வயிற்றெரிச்சல் எல்லாம் எவ்வளவு தெளிவாக வெளிப்படுகின்றன !

லட்சுமணன் தாயின் அனுமதி பெற்றுக் குதூகலத்தோடும் பெருமிதத்தோடும் அண்ணனுடன் புறப்படுகிறான். ஆனால் இப்பொழுது சுமித்திரை 'மகனே !' என்று அவனைக் கூப்பிடுவதற்குக் காரணம் என்ன? தாயுள்ளத்தில் ஏதாவது சலனம் ஏற்பட்டு விட்டதா? 'ராமனுடன் செல்லாதே !' என்கிறாள். ஏன்?

‘அவன் பின் செல்’ என்று சொல்லும்போதுதான் சுமித்திரையினுடைய கருத்து விளங்குகிறது. லட்சுமணன் ராமனுடன் கம்பீரமாகப் போனால், அவனுக்குத் தானும் சமானன் என்ற எண்ணம் உண்டாகுமாம்; தானும் ஓர் இராஜ குமாரன் என்பதும் நினைவிற்கு வருமாம்; தன்னை, இராமன் தம்பி யென்றே நினைத்துக் கொள்ளவும் கூடும். இப்படிப்பட்ட நினைப்பினால் வனத்திலே ராமனுக்கு வேண்டிய குற்றேவல் செய்வதில் குறைகள் ஏற்படக் கூடுமாம்.

ஆகவே சுமித்திரை, ‘உடன் செல்லாதே, பின் செல்’ என்று சொல்லத் தொடங்குகிறாள் :

பின்னும் பகர்வாள் : “மகனே! இவன்
பின்செல் ; தம்பி
என்னும் படியன்(று), அடியாரினில்
ஏவல் செய்தி ;
மன்னும் நகர்க்கே இவன்வந்திடின்
வா, அ(து) அன்றேல்,
முன்னம் முடி!” என்றனள், பால்முலை
சோர நின்றாள்.

[செய்தி — செய்வாய். மன்னும் நகர் — பொருந்திய நகரம்; அயோத்தி. முடி — உயிரை முடித்துக்கொள். சோர — பெருக.]

லட்சுமணனைப் பார்ப்பவர்களும் “இவன் இராமன் தம்பி” என்று தெரிந்து கொள்ளாமல் “அவன் ஏவும் தொழிலைச் செய்யும் அடிமை!” என்றே நினைக்கும்படி நடந்துகொள்ள வேண்டுமாம். இவ்விதமாகப் பணி செய்து, “நகரத்துக்கு இராமன் மீண்டு வந்தால் நீயும் வா” என்று தாய் சொல்லுகிறாள். ஆனால், “அவனுக்கு ஏதேனும் ஆபத்து நேருமாயின்” என்பதைச் சொல்லவும் கூசி, “அது அன்றேல் முன்னம் முடி!”— “அப்படியல்லாமற்போனால், நீ அவனுக்கு முன்னமே உயிரை முடித்துக் கொள்ள வேண்டும்” என்று ஆசிர்வதிக்கிறாள்.

இத் தாயைப் “பால்முலை சோர நின்றாள்” என்கிறான் கவிஞன். அவ்வளவுபேரபிமானம் பெற்ற பிள்ளையிடம்!

இவளன்றோ வீரத் தாய்! இத் தாயால் உருவாக்கப் பெறும் குணாதிசயத்திலே தியாகம் விசேஷ இடம் பெறுவதில் ஆச்சரியமுண்டோ?